செ. கு. எண்: 271 நாள் :10.10.2013

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 10.10.2013

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், ரவிபுதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பால்ராஜ் என்பவரின் மகன் சிவா 31.8.2013 அன்று கல்குளம் வட்டம், பெருஞ்சாணி கிராமம், பேச்சிப்பாறை அருகே பாலம் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த போது தாங்குதள மர பலகை சரிந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், முத்தாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரப்பன் என்பவரின் மகன் சுப்ரமணி;

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், மந்திகுளம் கிராம மஜரா மீனாட்சிபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரிமுத்து என்பவரின் மகன் பெரியபாண்டி மற்றும் ஜமீன்செங்கல்படை கிராம மஜரா ஜெகவீரபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆதிலிங்கம் என்பவரின் மகன் பாலமுருகன் ஆகிய இருவரும் 5.9.2013 அன்று மின்னல் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் வட்டம், வண்டகப்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகேசன் என்பவரின் மனைவி மலர், மகன்கள் சிறுவன் ஜெயவேல், சிறுவன் கோகுல்நாத் மற்றும் புளியந்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலகிருஷ்ணன் என்பவரின் மனைவி காமாட்சி ஆகியோர் 7.9.2013 அன்று வண்டகப்பாடி அருகே உள்ள கோரை ஆற்றினைக் கடக்கும் போது ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், பீர்க்கன்கரணை கிராமம், தேவநேச நகரைச் சேர்ந்த திரு. நித்தியாநந்தம் என்பவரின் மகன் சிறுவன் நாகோமியா 7.9.2013 அன்று

இரும்புலியூர், அருள்நகர் பாதாள சாக்கடை அமைக்க தோண்டப்பட்டிருந்த பள்ளத்தில் தவறி விழுந்து உயிரிழந்தான் என்ற செய்தியையும்;

பெரம்பலூர் மாவட்டம், கல்பாடி வட்டம், எறையசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சொக்கலிங்கம் என்வரின் மனைவி அருக்காணி 9.9.2013 அன்றும்;

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், தாழவேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. முனிரத்தினம் என்பவரின் மகன் குமாரசாமி 10.9.2013 அன்றும் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**